RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 195 | ஜூலை.21 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர்: எதிர்க்கட்சிகளின் அமளியால் இரு அவைகளும் ஒத்திவைப்பு

புது டெல்லி: ஜூலை.21-

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கிய நிலையில், எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக இரு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று காலை சலசலப்புடன் தொடங்கியது. அவை கூடிய சில நிமிடங்களிலேயே நீட் வினாத்தாள் கசிவு மற்றும் ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் போராட்டத்தில் தடியடி நடத்தப்பட்டது குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டன.

மாநிலங்களவையில், எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இந்த விவகாரங்களை எழுப்பியதுடன், டெல்லியில் நடைபெறும் போராட்டங்களை அரசு ஒடுக்க முயல்வதாகவும் குற்றம் சாட்டினார். மேலும், இரு அவைகளிலும் ராமர் கோயில் காணிக்கை திருட்டு விவகாரம் குறித்தும் கேள்வி எழுப்பினர்.

இரு அவைகளிலும் கூச்சல் குழப்பம் நிலவியதால், அவைகள் நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன. இருப்பினும், மீண்டும் அவைகள் கூடிய பிறகும் எதிர்க்கட்சிகள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்ததால், இரு அவைகளும் மீண்டும் மதியம் 12.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

அதன்பின்னர் இரு அவைகளும் கூடியதும்



மேற்கண்ட விவகாரங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை முற்பகல் 12: 50 மணி வரையிலும், மக்களவை நண்பகல் 1 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

அதன்பின்னர் இரு அவைகளும் கூடியதும் அமளி தொடர்ந்ததால், மாநிலங்களவை மற்றும் மக்களவை மீண்டும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 1 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டுமாறு மாநிலங்களவைத் தலைவர் ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி, "மழைக்காலக் கூட்டத்தொடரின் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் முழு மனதுடன் பங்கேற்க வேண்டும். இந்த கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக இருக்கும் என நம்புகிறேன்" என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கூடியதும் மறைந்த பிரபலங்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வின் ஒரு பகுதியாக, கத்தாரின் முன்னாள் மன்னர் ஷேக் ஹமத் பின் கலீ/பா அல் தானி உள்ளிட்ட பல முக்கிய ஆளுமைகளுக்கு இரு அவைகளும் அஞ்சலி செலுத்தின.

மக்களவையில் அமளி நிலவிய சூழலில், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை திருத்த மசோதாவை சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வால் தாக்கல் செய்தார். இந்த மசோதாவானது, உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையை, தலைமை நீதிபதி உட்பட நிரந்தரமாக 38 ஆக உயர்த்த வகை செய்கிறது.

# "விஜய் ஆட்சியில் படிப்படியாக ஊழல் குறைக்கப்படுகிறது"

## நாராயணசாமி கருத்து

புதுச்சேரி, ஜூலை.21-

"விஜய் ஆட்சியில் தமிழகத்தில் படிப்படியாக ஊழல் குறைக்கப்படுகிறது" என்று புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி தெரிவித்தார். "ஊழல் செய்தால் பதவி பறிப்பேன் என விஜய் போல புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி சொல்ல தயாரா?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "இலாகா இல்லாத பதவி காலத்தை முடித்த ஜான்குமாரை போல் தற்போதுள்ள 5 அமைச்சர்களின் காலமும் முடிந்து விடுமோ என்ற அச்சம் உள்ளது. ரங்கசாமியின் செயல்பாட்டால் புதுச்சேரிக்கு ஏன் அமைச்சரவை என கேள்வி எழுகிறது. வாக்களித்த மக்களுக்கு துரோகத்தை என்டிஏ கூட்டணியும், முதல்வரும் செய்கின்றனர்.

நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளது. கோப்புகளை வைத்து அதிகாரிகள் தூங்குகிறார்கள். முதல்வரை தவிர யாருக்கும் அதிகாரம் இல்லை. பாஜக ஏன் தூங்குகிறது என்று தெரியவில்லை. புதுச்சேரியில் வாய் மூடி மவுனமாக இருக்க காரணம் என்ன? இதற்கு பாஜக தலைவர்களும், பொறுப்பாளர்களும் பதில் சொல்ல வேண்டும்.

என்.ஆர். காங்கிரஸ் அடிமைகளின் கட்சி. முதல்வரை தவிர யாரும் பேச மாட்டார்கள். பாஜக தனது நிலைப்பாட்டை இதுவரை சொல்லவில்லை. புதுச்சேரி பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, முதல்வர் தான் இலாகா ஒதுக்குவதில் முடிவு செய்ய வேண்டும் என தட்டிக் கழிக்கிறார். கூட்டணி ஆட்சியில் என்.ஆர் காங்கிரஸ் பாஜகவுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு.

முதல்வர் ரங்கசாமி செய்யாவிட்டால் பாஜகவும் பொறுப்பு தான். நிர்வாகம் குட்டிச்சுவராகிவிட்டது. மக்கள் நலத்திட்டம் மட்டுமில்லாமல் ஐந்து மாதம் அரிசி ரேஷனில் போடவில்லை. எப்போது அரிசி போடப்படும் என்பதை முதல்வர் தெரிவிக்க வேண்டும். போலி மருந்து தொழிற்சாலை விவகாரத்தில் புதுச்சேரி அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். காங்கிரஸ் விரைவில் போராட்டம் நடத்துவோம்.

துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதன் காமராஜர் பிறந்த நாள் விழாவில் முதல்வர் ரங்கசாமியை காமராஜருடன் ஒப்பிட்டு பேசியுள்ளார். காமராஜர் ரெஸ்டோ பாருக்கு ரூ.40 லட்சம் லஞ்சம் வாங்கினாரா? காமராஜர் ரெஸ்டோ பார்களை பள்ளி, கோயில், குடியிருப்பு பகுதியில் கொண்டு வந்தாரா? தனது கண்ணாடியை கழற்றி விட்டு கைலாஷ் நாதன் பார்க்க வேண்டும். அவரது கண்ணாடியில் கோளாறு உள்ளது.

கறைபடாத கரத்துக்கு சொந்தக்காரரான காமராஜரை அவரது நல்ல பெயருக்கு ஆளுநர் களங்கம் விளைவிக்கக் கூடாது. ஊழல் செய்தால் பதவி பறிப்பேன் என தமிழக முதல்வர் விஜய் போல் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி சொல்ல தயாரா? தமிழகத்தில் படிப்படியாக ஊழல் குறைக்கப்படுகிறது. ஊழலை குறைக்க முதல்வர் விஜய் பல முயற்சி எடுக்கிறார்" என்றார்.

அயோத்தி கோயில் விவகாரம் பற்றி பேசும்போது, பழநி விவகாரம் பற்றி பேச மறுப்பது ஏன் என்று கேட்டதற்கு, "பழநி விவகாரத்தில் விசாரணை நடக்கிறது" என்றார்.

தேர்தலில் வென்று 75 நாட்களாகியும் பிரதமரை சந்திக்காத என்டிஏ அரசு, முதல்வர் ரங்கசாமி புஸ்ஸி ஆனந்தை சந்திக்கிறாரே என்று கேட்டதற்கு, "அவரிடம் கேளுங்கள்" என்றார்.

## துன்புறுத்த வேண்டும் என்பதாலேயே கைது;

# எத்தனை வழக்கு போட்டாலும் சந்திப்போம்: ஆர்.எஸ்.பாரதி பேட்டி

சென்னை, ஜூலை.21-

விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டதற்கு தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்; நாட்டுக்காக சிறை சென்றவர்கள்தான் திமுகவினர். ஜனநாயக நாட்டில் விமர்சனம் செய்ய யாருக்கும் உரிமை உண்டு. தவெக ஆட்சிக்கு சகிப்புத்தன்மையே இல்லை.

மற்ற கட்சி எம்எல்ஏக்கள் தவெகவில் இணைகின்றனர்; திமுக எம்எல்ஏக்களை மாற்ற முடியாததால் கைது செய்கின்றனர். துன்புறுத்த வேண்டும், மன உளைச்சலுக்கு ஆளாக்க வேண்டும் என்பதாலேயே மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளது. அவதூறாக பேசினால் வழக்கு போடுங்கள், நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம். திமுகவினர் மீது எத்தனை வழக்கு போட்டாலும் சந்திப்போம் என்று கூறினார்.

# பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட்ட அமைச்சர்; த.வெ.க.,வினர் முண்டியடித்தபடி செல்ல முயன்றதால் பரபரப்பு

திருநெல்வேலி, ஜூலை.21-

பொருநை அருங்காட்சியகத்தை அமைச்சர் ராஜ்மோகன் நேரில் பார்வையிட்டார். அப்போது, தவெகவினர் ஒருவரை ஒருவர் முண்டியடித்தபடி உள்ளே செல்ல முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி பகுதியில் தொன்மைத் தமிழ் நாகரிகத்தை உலகுக்கு எடுத்துரைக்கும் வகையில் தாமிரபரணி நதிக்கரையில் அகழாய்வு நடத்தப்பட்டப் பகுதிகளான ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை, துலுக்கர்பட்டி ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற தொல்பொருட்களைக் காட்சிப்படுத்தும் வகையில் கடந்த திமுக ஆட்சியில் ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்ட பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தைச் சுற்றுலாப் பயணிகள் பார்த்து வியந்து வருகின்றனர்.

இந்த சூழலில், நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு முதலமைச்சர் விஜய் தலைமையில் தவெக அரசு அமைந்துள்ளது. இந்த நிலையில், வரும் தமிழக பட்ஜெட் கூட்டத்தொடரில் அருங்காட்சியகத்தின் பராமரிப்புப் பணிகளை மேம்படுத்த கூடுதல் நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், பள்ளிக்கல்வித்துறை, தமிழ் வளர்ச்சி, தொல்லியல் துறை மற்றும் செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் நேற்றிரவு (ஜூலை 19) பொருநை அருங்காட்சியத்திற்கு சென்று நேரில் பார்வையிட்டார்.

மின்னொளியில் ஜொலித்த காட்சிக் கூடங்களை அமைச்சர் ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு வியந்தார். அப்போது, தொல்லியல் பொருட்கள் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் தொல்லியல் பொருட்கள் குறித்தும், பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கும் வசதிகள், தொழில்நுட்ப வசதிகள் குறித்தும், அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், அருங்காட்சியங்களில் உள்ள தொழில்நுட்ப வசதிகளையும் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் மற்றும் துறைச் சார்ந்த அரசு உயரதிகாரிகள், பொருநை அருங்காட்சியக அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இங்கு தாமிரபரணி நாகரிகத்தை வெளிப்படுத்தும் பல்வேறு அகழ்வாராய்ச்சிப் பொருட்கள், பழங்கால மண்பாண்டங்கள், இரும்பு ஆயுதங்கள், மனித எச்சங்கள், நாணயங்கள், ஆபரணங்கள் உள்ளிட்டவை அறிவியல் முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, அமைச்சரின் வருகையையொட்டி அருங்காட்சியக நுழைவுவாயிலில் தவெகவினரின் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. அமைச்சர் வந்ததும், தொண்டர்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்தப்படி உள்ளே செல்ல முயன்றனர். தவெகவினர் அருங்காட்சியகத்தின் அரங்கிற்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் அறையின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தது. இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# 'தடையற்ற மின்சார விநியோகம் வேண்டும்' தமிழக அரசுக்கு தினகரன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.21-

தடையற்ற மின்சாரத்தை எந்தவித குளறுபடிகளும் இன்றி விநியோகம் செய்திட வேண்டும் என்று தமிழக அரசுக்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "தவெக ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதலே, தமிழகத்தில் அன்றாடம் அரங்கேறும் அறிவிக்கப்படாத மின்வெட்டால் பொதுமக்கள் தொடங்கி, விவசாயிகள், வணிகர்கள், சிறு, குறு நடுத்தர தொழில் முனைவோர்கள் என அனைத்து தரப்பினரும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வரும் நிலையில், தற்போது மின் கட்டணமும் இரு மடங்காக அதிகரித்திருப்பதாக மின் நுகர்வோர்கள் மத்தியில் புகார் எழுந்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என தேர்தலுக்கு முன்பாக வாக்குறுதியளித்த தவெக, ஆட்சிக்கு வந்த பின்பு இரு மாதத்திற்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் என அறிவித்து மக்களை ஏமாற்றிய கையேடு, இலவசமாக வழங்கப்படும் மின்சாரத்துக்கான தொகையையும் மக்களிடமே மறைமுகமாக மின் கட்டணத்தின் மூலம் வசூல் செய்ய முற்படுவது கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கனவே, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால், தமிழக மக்கள் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆண்டுதோறும் உயர்த்தப்படும் மின் கட்டணம் நடப்பாண்டில் உயர்த்தப்படாது என பத்திரிகையாளர்கள் முன்னிலையில் பொய் வாக்குறுதி அளித்துவிட்டு, பொதுமக்களின் கண்களில் மண்ணை தூவி மறைமுகமாக மின் கட்டணத்தை உயர்த்தும் நடவடிக்கையில் மின்வாரியம் இறங்கியிருக்கிறதோ? என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மின் கணக்கீட்டு முறையில் குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதால் தவறான மற்றும் அதிகப்படியான கட்டணங்கள் விதிக்கப்பட்டிருப்பதாக மின்வாரிய தலைமைப் பொறியாளர்களே ஒப்புக் கொண்டிருக்கும் நிலையில், மின் நுகர்வோர்களிடம் இருந்து இதுவரை அதிகமாக பெறப்பட்ட மின் கட்டணங்களை திருப்பியளிப்பதோடு, தமிழகம் முழுவதும் குளறுபடிகள் குறித்த முறையான விசாரணை மேற்கொண்டு, அவை சரி செய்யப்படும் வரை மின்கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என மின்வாரியம் அறிவிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டிய பொறுப்பு மிக்க பதவியில் இருக்கும் மின்சாரத் துறை அமைச்சர், தன் துறையில் நடைபெறும் சாதனத் திருட்டுகளையும், நிர்வாகக் குளறுபடிகளையும் களைய உருப்படியான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், காலை மாலை என இரு வேளைகளிலும் தன் குறைகளை மறைப்பதற்காகவும், பிரச்சனைகளை மடைமாற்றுவதற்காகவும், எதிர்க் கட்சித் தலைவர்களை எப்படி இழிவாக விமர்சிக்கலாம் என்பதிலேயே முழு கவனத்தை செலுத்தி வருவதே மின்சாரத் துறையில் நடைபெற்றிருக்கும் இத்தகைய குளறு படிகளுக்கு முக்கிய காரணமாக அமைத்திருக்கிறது.

எனவே, மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் மின்சாரத் துறை மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமே தவிர, குழப்பமான, குளறுபடிகள் நிறைந்த கணக்கீடுகளின் மூலம் மக்களை சுரண்டும் அமைப்பாக செயல்படக் கூடாது என்பதை இனியாவது உணர்ந்து, தடையற்ற மின்சாரத்தை எந்த வித குளறுபடிகளும் இன்றி விநியோகம் செய்திட வேண்டும் என மின் வாரியத்தையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# தேனி மாவட்டம் மேகமலை மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை கைவிடுங்கள்




தேனி, ஜூலை.21-

தேனி மாவட்டம் மேகமலை மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை கைவிடுங்கள் CPI. ML. மாஸ் லைன் தேனி மாவட்ட செயலாளர் கண்டன அறிக்கைஇதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட்) மாஸ் லைன் தேனி மாவட்ட குழு சார்பில் மாவட்ட செயலாளர் ஜோதி பாண்டிகண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேகமலை மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை கைவிடுங்கள். நீதிமன்ற உத்தரவை காரணம் காட்டி பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனவாழ் மக்களின் வாழ்வுரிமையை பறிக்க ாதீர்கள். மேகமலையில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனவாழ் மக்களை காலி செய்ய வேண்டும் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அதிர்ச்சி மிகுந்த கவலையளிக்கின்றன. வனத்தைப் பாதுகாத்து, இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்த மக்களின் வாழ்வுரிமை, குடியிருப்பு உரிமை மற்றும் வாழ்வாதார உரிமை பாதுகாக்கப்பட வேண்டியது அரசின் கடமையாகும். வன உரிமைச் சட்டம், 2006 ன் அடிப்படை நோக்கம், வரலாற்று அநீதியைச் சரிசெய்து வனத்தைச் சார்ந்து வாழும் மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பதே ஆகும். எனவே, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தும் பெயரில், சட்டப்பூர்வமான உரிமை கோரிக்கைகள் முழுமையாக பரிசீலிக்கப்படாமல் மக்களை கட்டாயமாக வெளியேற்றும் எந்த நடவடிக்கையும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேகமலை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தமிழக அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், உடனடியாக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கிராம சபைகளுடன் ஆலோசனை நடத்தி, சட்டப்படி உரிய தீர்வை ஏற்படுத்த வேண்டும். மேகமலை மக்களை கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். வன உரிமைச் சட்டம், 2006ன் கீழ் உள்ள அனைத்து தனிநபர் மற்றும் சமூக உரிமை கோரிக்கைகளையும் விரைந்து பரிசீலித்து உரிமை வழங்க வேண்டும். மக்களின் வாழ்வுரிமை, குடியிருப்பு உரிமை மற்றும் வாழ்வாதார உரிமைக்கு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மேகமலை மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட்) மாஸ் லைன் தேனி மாவட்ட குழு மக்களோடு, மக்களாக தோளோடு, தோழனாக தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. மக்களின் உரிமைகளை பறிக்கும் எந்த நடவடிக்கையையும் கடுமையாகக் கண்டிக்கிறது இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆற்காட்டில் கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி



ராணிப்பேட்டை, ஜூலை.21-

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தனியார் திருமண மண்டபத்தில் அன்னை தெரேசா அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் ராணிப்பேட்டை மாவட்டத் தலைவர்பொன்.கு. சரவணன் தலைமை தாங்கினார். என்.பி.டி. சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் விக்ரமராஜா, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார், உதவும் உள்ளங்கள் அறக்கட்டளை சந்திரசேகர், அகத்தியர் அறக்கட்டளை தலைவர் கணேஷ்ஜெயலலிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இதில் சிறப்பு அழைப்பாளராக விஐடி வேந்தர் டாக்டர் ஜி. விஸ்வநாதன் கலந்து கொண்டு 262 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையை வழங்கி சிறப்புரையாற்றினார். கல்வியே மாணவர்களின் எதிர்காலத்தை உயர்த்தும் சக்தி என்பதையும், தொடர்ந்து சிறப்பாக கல்வி கற்று சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக உருவாக வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.தனியார் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் அதிகமாக இருந்தாலும் வேலைக்கு வருபவர்கள் குறைவாக உள்ளதாகவும், தமிழ்நாட்டில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கையை மேலும் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதில் ஏவிடி. பாலா, டர்னிங் பாஸ்கர், தங்கபாண்டியன், ஜெய் மாருதி சரவணன் மற்றும் பெற்றோர்கள் மாணவர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

# கோணிமேடு கிராமம் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா



மாதவரம், ஜூலை.21-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 28ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், கூழ்வார்த்தல், பதிவிளக்கு பூஜை மற்றும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரத்துடன் மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் 120பேர் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அறுசுவை அன்னதானம், சுவையான குளிர்பானங்களை பக்தர்களுக்கு வழங்கினர். இத்திருவிழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கையுடன் திருவீதி உலாநடைபெற்றது.





■ சென்னை, ஓஎம்ஆர் சாலை, நாவலூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராஜ கணபதி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக ஊர் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது. வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தந்து அப்பகுதி வாழ் மக்களை காத்து அருள் பாலித்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ராஜகணபதிக்கு நிகழும், பராபவ வருடம் ஆனி மாதம் 32 ஆம் தேதி, வியாழக்கிழமை அன்று சிம்ம லக்கனத்தில் சுபயோக சுபதினத்தில், கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, நாவலூர் ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி ராஜாராம், துணைத் தலைவர் கிருஷ்ணன், மற்றும் வார்டு உறுப்பினர்கள் கோவில் நிர்வாகிகள் இணைந்து சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்,



■ தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத் தலைவர் கு.ப. கிருஷ்ணன் நீலகிரி மாவட்டம் நடுஹட்டி கெட்டிக்கம்பை பகுதியில் ரூ.22.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 164 எண்ணிக்கையிலான அடுக்குமாடி குடியிருப்புகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்..உடன் நிர்வாகப் பொறியாளர் சுதாகர், உதவி நிர்வாகப் பொறியாளர் பாலாஜி உட்பட பலர் உள்ளனர்..




■ கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027, முதல் கட்டமாக 17.07.2026 முதல் 31.07.2026 வரை வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பிற்கான சுயக் கணக்கெடுப்பு நடைபெறுவது குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (20.07.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மோகன், கிருஷ்ணகிரி துணை காவல் கண்காணிப்பாளர் ராமசந்திரன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (20.07.2026) பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மோகன், கிருஷ்ணகிரி துணை காவல் கண்காணிப்பாளர் ராமசந்திரன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் பிரச்சனையை சரி செய்ய முடியவில்லை : அமைச்சர் சரத்குமார்



தாம்பரம், ஜூலை.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பெருந் தலைவர் காமராஜரின் வம்சாவளியைச் சேர்ந்த டாக்டர் மஞ்சுப்பிரியா மாரிசாமி தலைமையில், 500க்கும் மேற்பட்டோர் தாம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். இதில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமார் முன்னிலையில் புதிய உறுப்பினர்கள் கட்சியில் இணைந்தனர். பின்னர் நிகழ்ச்சி மேடையில் பேசிய அமைச்சர் சரத்குமார் தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் பிரச்சனையை சரி செய்ய முடியவில்லை கவுன்சிலர்கள் அரசியல் அதிகமாக உள்ளது. வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளராக முதல் அமைச்சர் யாரை வேட்பாளராக அறிவிக்கிறாரோ அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தொண்டர்கள் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இந்த இணைவு விழாவில் கட்சியின் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். 500க்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் கட்சியில் இணைந்தது, தாம்பரம் பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் அமைப்பு வலுப்பெற்று வருவதற்கான முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.




# தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்கம் சார்பில் பேரணி

ராணிப்பேட்டை, ஜூலை.21-

ராணிப்பேட்டை சந்தைமேடு அருகே தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்கம் சார்பில் 13 அம்ச கோரிக்கையில் வலியுறுத்தி பேரணி நடைபெற்றது இந்த பேரணியை செயலாளர்கள் அன்பழகன், ராமமூர்த்தி, வீரமணி ஆகியோர் துவக்கி வைத்தனர். மாவட்ட தலைவர் சுந்தரராஜன் வரவேற்புரையாற்றினார் போராட்டக் குழு தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார் மாவட்ட பொருளாளர் கமலநாதன் முன்னிலை வகித்தார் மாவட்ட செயலாளர் சேதுபதி சிறப்புரையாற்றி பேசும் போது அனைத்து பணியாளர்களுக்கும் புதிய ஓய்வு நிர்ணயம் செய்வதில் உள்ள நிபந்தனைகளை தளர்த்த வேண்டும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய பலன்களை உடனடியாக வழங்குதல் மற்றும் கருணை ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் தாயுமானவர் திட்டத்தில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை களைய வேண்டும் பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர் வாரிசுகள் அனைவருக்கும் நிபந்தனையின்றி பணிகள் வழங்க வேண்டும் இடமாறுதல் செய்யப்படுவதை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார் பின்னர் சந்தைமேடு பகுதியில் இருந்து முத்துக்கடை பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக பேரணி நடைபெற்றது மேலும் கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் அடுத்த மாதம் மூன்றாம் தேதி முதல் காலை வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று தமிழக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்இறுதியில் மாவட்ட போராட்ட குழு செயலாளர் தட்சிணாமூர்த்தி நன்றி உரையாற்றினார்



# ஸ்ரீ மொண்டியம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழா

மாதவரம், ஜூலை.21-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமம் மொண்டியம்மன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மொண்டியம்மன் ஆலயத்தில் 63ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண் பிக்கப்பட்டது. பின்னர் கங்கை திரட்டுதல், காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கூழ்வார்த்தல் வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்றவை நடைபெற் றது. இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பித்து மேளதாள வானவேடிக்கையுடன்திருவீதி உலா நடைபெற்றது.முடிவில் அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு மற்றும் விஷேச பூஜை நடைபெற்றது.

# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி. ஜூலை.21-

நீலகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையில் கீழ் உள்ள சமூகநீதி கல்லூரி மாணவ / மாணவியர் விடுதிகளை சுத்தமாகவும். சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டு, தூய்மைப்பணியாளர் பணியிடங்களை தொழில் அனுபவம் மிக்க Professional Outsourcing Agency உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, தொழில் அனுபவம் மிக்க Professional Outsourcing Agency மூலம் கல்லூரி விடுதிகளில் தூய்மைப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் மற்றும் நிறுவனத்தால் தூய்மைப்பணியாளருக்கு வழங்கப்படும் ஊதியம் ஆகியவை கீழ்கண்ட தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும் அதன் விவரம் பின்வருமாறு.

விடுதி அமைந்துள்ள இடத்தின் வகைப்பாடுநிகர ஊதியம்ஒரு துப்புரவுப் பணியாளருக்கு வழங்கப்படும் ஒரு மாத ஊதியம(Employee take home salary after deduction EPF ESLGST & Service Tax-5%)மாநகராட்சி 15777 9978 நகராட்சி 12116 8640 பேரூராட்சி 9916 6930 கிராம பஞ்சாயத்து 7321 4630 மேலும், ஆண் விடுதிக்கு ஆண் பணியாளர்களை கொண்டும். பெண் விடுதிக்கு பெண் பணியாளர்களை மட்டுமே கொண்டு பணிமேற்கொள்ளப்படும். மேற்கண்ட Professional Outsourcing Agencyயானது கீழ்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் நிறுவனமானது அங்கீகரிக்கப்பட்ட / பதிவுப்பெற்ற தமிழ்நாட்டினை தலைமையிடமாகக் கொண்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.. Income Tax Returns (Certified by the Auditor) GST Filing பராமரிக்கும் நிறுவனமாக இருக்க வேண்டும். ESI மற்றும் EPF ஆகியவற்றினை முறையாக பதிவு செய்த நிறுவனமாக இருக்க வேண்டும்.தேர்வு செய்யப்படும் நிறுவனமானது எந்த ஒரு துறையின் கறுப்பு பட்டியலிலும் (black list) இடம் பெற்றிருக்கக் கூடாது .தேர்வு செய்யப்படும் நிறுவனமானது Man Power Supplyயில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் தகுதியுள்ள நிறுவனமாக இருக்க வேண்டும். ஏற்கனவே எதேனும் ஒரு அலுவலகத்திற்கு Man Power Supply செய்து அந்த அலுவலகத்தின் நன்மதிப்பினை பெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும். மேலும் ஆண்டிற்கு பத்து மாதங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்படும். எனவே, சமூகநீதி கல்லூரி மாணவ/ மாணவியர்விடுதிகளில் தூய்மைப்பணியாளர் பணியிடங்களை தொழில் அனுபவம் மிக்க Professional Outsourcing Agencyயினை தேர்வு செய்திட விண்ணப்ப ங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கூடுதல் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பித்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



■ தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி பளியன்குடியில் மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட போது மாணவர்கள் மேல்நிலைப்படிப்பைத் தொடர, பள்ளி செல்வதற்கு போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்து தருமாறு மலைவாழ் மக்களின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவுப்படி, கூடலூர் நகராட்சி சார்பாக நாளை முதல் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை அப்பகுதி மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.உடனடியாக மேலும், குடியிருப்புப்பகுதியில் பழுதடைந்த குடிநீர்க்குழாய்கள் சரி செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்க, சரிசெய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உடனடி நடவடிக்கையை கண்ட மக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றியை தெரிவித்துள்ளார்கள்.





## வியாசர்பாடி ஸ்ரீராக்காச்சி அம்மன் ஆலயத்தில் உலக மக்கள் நன்மைகள் வேண்டி சண்டியாகம் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.21-

சென்னை வியாசார்பாடி அன்னை இந்திரா நகரில் அமைந்துள்ள தர்மமிகு ஸ்ரீ சரபேஸ்வரர் ராக்காச்சி குரு திருத்தலத்தில் ஸ்ரீ சிவசக்தி சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் உலக மக்கள் நன்மைகள் வேண்டி சண்டியாகம் நிகழ்ச்சி ஸ்ரீ சிவசக்தி காயத்திரிதேவி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து மக்கள் கட்சியின் நிறுவனர் அர்ஜுன் சம்பத் கலந்துகொண்டு உலக மக்கள் நன்மைகள் வேண்டி சண்டியாகம் நிகழ்ச்சினை துவக்கிவைத்தார்.பின்னர் கணபதி பூஜையுடன் மூலமந்திரங்கள் முழங்க மேளதாளத்துடன் சண்டியாகம் நிகழ்ச்சி மஹா தீபாராதனையுடன் நடைபெற்றது.இதில் .விபூதி சித்தர் அண்ணாமலை, சிவஸ்ரீகார்த்திக்சிவம், கண்ணன், பொன்னுசாமி, பிஜேபி அண்ணாதுரை, உள்ளிட்ட பொதுமக்கள், அடியார்கள், மகான்கள், ,திரைப்பட பாடகர் கானா உலகநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.முடிவில் தமிழ் மாநில முன்னேற்ற கழகம் நிறுவனர் மாறன்சக்தி மனோகரி பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினார்.



## ஆயக்குடியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனின் விடுதலை இயக்க சார்பில் தொடர் காத்திருப்பு போராட்டம்

திண்டுக்கல், ஜூலை.21-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள ஆயக்குடி கொய்யா சந்தையில் தலித் விவசாயிகள் மீது பழனி வருவாய்த் துறையினரால் போடப்பட்ட பொய் வழக்கை திரும்ப பெறக் கோரி ஆயக்குடி விவசாயிகளுக்கு நீதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனின் விடுதலை சார்பில் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றன.. ஆயக்குடியில் உள்ள தலித் விவசாயிகள் நிலத்தில் சில ஆண்டுகளாக வருவாய் துறை அதிகாரிகள் துணையோடு மண் கடத்திச் செல்லும் மா/பியா கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தலித் விவசாயிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கை வருவாய்த்துறையினர் திரும்ப பெற வேண்டு ம்.சம்பத் தப்பட்டஅதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் தலைமையில் விவசாயிகள் மீது மண் திருடியதாக பொய் வழக்கு பதிவு செய்து கோட்டாட்சியர் மூலம் மூன்று கோடி 40 லட்சத்துக்கு மேல் நஷ்டஈடு போடப்பட்டதை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி தொடர் காத்திருக்க போராட்டம் நடைபெற்றன. போராட்டத்தின் தலைமையாக பன்னீர்செல்வம் முன்னிலையாக மயில்சாமி போராட்டத்தை மாவட்ட செயலாளர் முருகேசன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து போராட்டத்தின் சிறப்புரையாக மாவட்ட நிலை குழு மதியழகன் மாநில குழு சபரி மாநில குழு மீனாட்சி சுந்தரம் முன்னிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகின்றன..



## வடகரை ஊராட்சி சமுதாய நலகூடத்தில் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.21-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி சமுதாய நலகூடத்தில் முன்னாள் தமிழ்நாடு முதல்வர் கர்மவீரர் காமராஜரின் 124 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் முன்னாள் துணைத்தலைவர் மு.சந்தோஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் காங்கை குமார் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் அருணாச்சலம், செங்குன்றம் நகர காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர்கள் கோபி, ராஜீவ்காந்தி, நிர்வாகிகள் குபேந் திரன்,டாக்டர். ராபர்ட், பயாஸ்உசேன், பாஸ்கரன், கோட்/ர் உதயா, மணிகண்டன், அ/பர், சாகுல், பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடுதல் ,டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தல், லஞ்சம் தவிர்..! நெஞ்சம் நிமிர்..!! வாசகம் எழுதிய காமராஜர் புகைப்படம் அரசு அலுவலகத்திற்கு வழங்குதல், கர்மவீரர் காமராஜர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர், பேச்சுப் போட்டி, ஓவியப்போட்டி, சிலம்பம் சுற்றுதல் போன்றவை நடைபெற்றது. பின்னர் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவர்கள் உட்பட 124 மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள், வடகரை ஊராட்சி ஊழியங்கள், அரசு பள்ளி மற்றும் கிராம தூய்மை பணியாளயாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.இதில்மித்ரன் டியூசன் சென்டர் ஆசிரிய ஆசிரியைகள், பொதுமக்கள், மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.



■ சென்னை, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணியில் தமிழ்நாடு அரசு மாநில அளவிலான பேச்சுப் பேட்டியில் திருவாரூர் மாவட்டம், கருவாக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் H. கிஷோர் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றுள்ளார். மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவன் கிஷோருக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ. ராஜ்மோகன் அவர்களால் ரூபாய் 50,000 காசோலையும், பாராட்டுச் சான்றும் வழங்கி கௌரவித்தார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (20.07.2026) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




■ திருப்பூர் மாநகராட்சிஆணையாளர் எம்.பி.அமித் தலைமையில் மைய அலுவலக கூட்டரங்கில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர், கட்டுமானப் பணி ஆகிய பணிகள் குறித்து செயற்பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், மற்றும் சுகாதார அலுவலர்கள் ஆகிய அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர் சுந்தரராஜன், மாநகர நல அலுவலர் மரு. மோகன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்

## நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க காவல்துறை சீருடை கட்டாயம்: டிஜிபிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை.21-



நீதிமன்றங்களில் சாட்சியங்கள் அளிக்க ஆஜராகும் போது முறையான சீருடை அணிந்து செல்ல வேண்டும் என காவல்துறைக்கு அறிவுறுத்தி சுற்றறிக்கை பிறப்பிக்க டிஜிபிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மது போதையில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்ததாக 2016ல் விழுப்புரம் சிறப்பு எஸ்.ஐ. ஆறுமுகத்திற்கு ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டதற்கு எதிராக அவர் வழக்கு தொடர்ந்திருந்தார். அதனை விசாரித்த தனி நீதிபதி தண்டனையை ரத்து செய்திருந்தார். இதற்கு எதிராக டிஜிபி மேல்முறையீடு செய்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த நிலையில், உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

## அஸ்தினாபுரம் பகுதி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் நடைபெற்றது

குரோம்பேட்டை, ஜூலை.21-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில்தமிழக முதல்வர் ஜோசப் விஜய் 53வது பிறந்த நாளை முன்னிட்டு அஸ்தினாபுரம் பகுதி தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் , செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் குமார் தலைமையில் அஸ்தினாபுரம் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் ராஜகுமாரன், மற்றும் குரோம்பேட்டை மேற்கு



பகுதி செயலாளர் ஏ டி எஸ் சுகன் ஏற்பாட்டில் 700 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து குரோம்பேட்டை பேருந்து நிலையம் வரை போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மினி மாரத்தான் நடைபெற்றதுஇந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி பங்கேற்று கொடியாசைத்து மாரத்தான் நிகழ்ச்சி துவக்கி பின்னர் மாரத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்,

மாரத்தான் நிகழ்ச்சியின் பங்கேற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தனர் உடன் நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள், மகளிர் அணியினர் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், தொல்லியல் துறையின் சார்பில் கீழடியில் உள்ள திறந்த வெளி அருங்காட்சியக மையத்தினை பார்வையிட்டு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன்ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு, சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர், முனைவர் வீ.ப. ஜெயசீலன்., சட்ட மன்ற உறுப்பினர்கள் இளங்கோவன்(மானாமதுரை) எஸ். கார்த்திகேயன் (மதுரை கிழக்கு) மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் தே.ஜெ/பி கிரேசியா மற்றும் தொல்லியல் துறை முதன்மை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 தொடர்பான விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் .சிவபிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., பெற்றுக் கொண்டார்.




■ தமிழகம் முழுவதும் தொடக்க மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள், நியாயவிலைக் கடை பணியாளர்களின் 13 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை மனு மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டு, தமிழக முதல்வருக்கு அனுப்பி வைக்க வலியுறுத்தப்பட்டது. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் ஆகஸ்ட் 3 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்படும் என சங்க நிர்வாகிகள் எச்சரித்தனர்.

# மானாமதுரை பெண்கள் விடுதியில் பாதுகாப்பு குறைபாடு? நடவடிக்கை எடுக்க பெற்றோர் கோரிக்கை

மானாமதுரை, ஜூலை.21-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் செயல்பட்டு வரும் அரசு பெண்கள் விடுதியில் மாணவிகளின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.பெற்றோர் மற்றும் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுவதாவது, பள்ளியில் பயிலும் மாணவிகள் சில நேரங்களில் விடுதியின் நுழைவுவாயில் (கேட்) திறக்கப்படாததால், சுவர் ஏறி குதித்து பள்ளிக்குச் செல்வதும், பள்ளி முடிந்து மீண்டும் அதேபோல் விடுதிக்குள் வருவதும் நடைபெறுவதாக கூறப்படுகிறது. இந்த நிலை மாணவிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்குவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.மேலும், விடுதியில் பாதுகாப்புப் பணியில் உள்ள வாட்ச்மேன் உள்ளூர் பகுதியைச் சேர்ந்தவர் அல்ல என்றும், விடுதியின் வார்டன் மானாமதுரை மற்றும் திருப்புவனம் ஆகிய இரு விடுதிகளின் பொறுப்பையும் ஒரே நேரத்தில் கவனித்து வருவதால், முழுநேர கண்காணிப்பில் சிக்கல் இருப்பதாகவும் கூறப் படுகிற து.அதேபோல், விடுதியில் பணியாற்றும் சமையல் பணியாளர் தனது பணியை மேற்கொள்ள மற்றொருவரை சம்பளம் வழங்கி பணியில் அமர்த்தியிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த குற்றச்சாட்டுகள் உண்மையா என்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள் வலியுறுத்துகின்றனர். தொலைதூர பகுதிகளில் இருந்து பள்ளிக்கு தினமும் பயணம் செய்வதில் நேர விரயம் ஏற்படுவதால், தங்களது பெண் குழந்தைகள் பாதுகாப்பாக தங்கி கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே விடுதியில் சேர்த்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் காரணமாக, தொடர்ந்து குழந்தைகளை விடுதியில் தங்க வைப்பது குறித்து அச்சம் நிலவுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து விடுதி வார்டன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் விளக்கத்தைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களின் பதில் கிடைத்தவுடன் அதையும் வெளியிடப்படும்.எனவே, மானாமதுரை அரசு பெண்கள் விடுதியில் நிலவி வருவதாக கூறப்படும் பாதுகாப்பு மற்றும் நிர்வாக குறைபாடுகள் குறித்து சிவகங்கை மாவட்ட நிர்வாகம் உடனடி விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக்கொணருவதுடன், மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பெற்றோர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# திருப்பூர் மாவட்டஆட்சியர் குடும்ப அட்டைதாரர்களுக்கு அறிவிப்பு

திருப்பூர், ஜூலை.21-

திருப்பூர் மாவட்டத்தில் AAY மற்றும் PHH குடும்ப அட்டைதாரர்கள் தங்களின் குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் தற்போது வரை கைவிரல் ரேகை பதிவு செய்யாதவர்கள் அருகில் உள்ள நியாய விலைக் கடைகளில் கைவிரல் ரேகையை வருகின்ற 31ம் தேதிக்குள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். மேலும், கைவிரல் ரேகையை பதிவு செய்யாமல் பணி நிமித்தமாக வேறு பகுதியில் வசிப்பவர்கள், தற்போது வசிக்கும் பகுதியின் அருகில் உள்ள நியாய விலைக் கடையில் கைவிரல் ரேகை பதிவு செய்ய வேண்டும்.இறந்த உறுப்பினர்களின் பெயர்களை வட்ட வழங்கல் அலுவலகத்தை அணுகி உரிய ஆவணங்களை சமர்ப்பித்து நீக்கம் செய்து கொள்ள வேண்டும். இல்லையெனில் அருகில் உள்ள நியாய விலைக் கடை விற்பனையாளரிடம் இறந்த உறுப்பினர்களின் குடும்ப அட்டை எண்ணுடன் ஆதார் அட்டை நகலை வழங்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்4, தெப்பக்குளம் பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் டிரோன் கேமராவில் இணைக்கப்பட்டுள்ள எல்.இ.டி மின்னணு திரையில் விழிப்புணர்வு குறும்படம் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

# மதுரையில் தூய்மை, குடிநீர் விநியோகம் தீவிர கண்காணிப்பு - ஆக்கிரமிப்பு, தடைப்பட்ட பிளாஸ்டிக் மீது ஆணையாளர் அதிரடி!

மதுரை, ஜூலை .21-

மதுரை மாநகராட்சி மண்டலம்-4 பகுதியில் தூய்மை பணிகள், குடிநீர் விநியோகம், ஆக்கிரமிப்புகள் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாடு தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப. நேரில் ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளுக்கு பல்வேறு முக்கிய உத்தரவுகளை பிறப்பித்தார்.வார்டு எண் 30 க்கு உட்பட்ட வைத்தியநாத ஐயர் தெருவில் ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர், வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து சேகரிக்க சுகாதாரப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், முல்லைப் பெரியாறு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தை ஆய்வு செய்த அவர், குடிநீரை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் செயல்பட்டு வரும் வார்டு அலுவலகத்தை பார்வையிட்டு, பணியாளர்களின் வருகைப் பதிவு, பணியாளர் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.பின்னர் செனாய் நகர் சிவசண்முகம் பிள்ளை வீதியில் உள்ள வணிக நிறுவனங்களை ஆய்வு செய்த ஆணையாளர், அனுமதிக்கப்பட்ட அளவை மீறி செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும், உணவகங்கள் மற்றும் கடைகளில் பயன்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள், பேப்பர் கப்புகள் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இனி மீறினால் அபராதம் விதிக்கப்படும் என கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். நெல்பேட்டை வைகை தென்கரை சாலையில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களிலும் ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர், கடைகளின் உரிமங்கள் செல்லுபடியாக உள்ளனவா என்பதை சரிபார்த்தார். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக் கூடாது என்றும், கடை முன்புற ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.இந்த ஆய்வின் போது உதவி ஆணையாளர் மணிமாறன், உதவி நகர்நல அலுவலர் அபிஷேக், சுகாதார அலுவலர் வீரண், சுகாதார ஆய்வாளர் கோபால் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

# பேருந்து டிக்கெட்டுகளில் விளம்பரங்கள் மூலம் வருவாயை உயர்த்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

சென்னை, ஜூலை .21-

பேருந்து டிக்கெட்டுகளில் விளம்பரங்கள் மூலம் வருவாயை உயர்த்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. டிக்கெட்டுகளின் பின்புறத்தில் விளம்பரங்களை அச்சிட அனுமதி வழங்கும் புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. டிக்கெட் அச்சிட பயன்படும் பேப்பர் ரோல்களை சொந்த செலவில் விளம்பர நிறுவனங்கள் தர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161